தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 97

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் : அண்ணாதுரை

THE "NAM NADU" A TAMIL DAILY. THE OFFICIAL ORGAN OF : THE D.P.F

சந்தா விகிதம் :
1 வருடம் ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
முன்பணம் அனுப்பப்படும் போது ...
இதற் ...

சென்னை : புரட்டாசிமீ 19உ திங்கள் (5—10—53) ★ ★ ★ வெளியூர் : புரட்டாசிமீ 20உ செவ்வாய் (6—10—53)

மதுரை, கோவை கருப்பு கொடி வெற்றி

கால்களில் கருப்புக் கொடிகளுடன் வானத்தில் புறாக்கள் வட்டமிட்டன!

ஆயிரக்கணக்கில் இருபெரு நகரங்களிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

மதுரையில் கருப்புக் கொடி காட்டிய கழகத்தவர் மீது காங்கிரஸ் கயவர்கள் பாய்ச்சல்

பாய்ந்த கதர்க் கொடியினருக்குப் பொதுமக்கள் பாடம் கற்பித்தனர்

மதுரை, அக். 3—

பண்டித நேரு, இன்று மதுரை வந்தபோது, மதுரை தி. மு. கழகத்தினரால் பெருத்த அளவில் கருப்புக் கொடி காட்டப் பட்டது. இது கண்டு ஆத்திரமடைந்த கதர்க் கொடி ஏந்திகள், தி. மு. கழகத்தினரைத் தாக்கினர். தி. மு. கழகத்தினருக்கு பொதுமக்களின் ஆதரவு அமோகமாக இருக்கவே, பொது மக்களே காங்கிரஸ் கூலிகளைத் தாக்கினர். அன்று ஏற்பட்ட கைகலப்பில் பலர் காயமடைந்தனர். தி. மு. கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியப் பிரதமர் பிற்பகல் 3-30 மணிக்கு மதுரை வந்து சேர்ந்தார். விமான நிலையத்தி லிருந்து அவர் அமெரிக்கன் கல்லூரிப் பக்கமாக வந்த போது 5000 பேருக்கு மேற் பட்ட தி. மு. கழகத் தோழர் கள் கையில் கருப்புக்கொடி ஏந்தியவண்ணம் "நேருவே திரும்பிப் போ; வடநாட்டு ஆட்சி ஒழிக; நான்செனஸை வாபஸ் பெறுக" என்று கோஷமிட்டனர். அதுபோது ஆத்திரம் கொண்ட காங்கிரஸ் கைக்கூலிகள் தி. மு. கழகத் தோழர்களைத் தாக்கத் துவங் கினர். இவர்களின் வெறிச் செயலை நேரில் கண்ட பொது மக்கள் வெகுண்டு காங்கிரஸ் கூலிகளைத் தாக்கினர்கள். கழ கத் தோழர்கள் இருவர் காய மடைந்தனர். ஏழுபேர் கைது செய்யப்பட்டனர்.

அதன்பின் நேரு, மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் செல் லும் வழியிலும் தெருவின் இருமருங்கும் தி. மு. கழகத் தோழர்கள் அணிவகுத்து நின்று கருப்புக்கொடி காட்டி கண்டனத்தைத் தெரிவித் தனர்.

நேரு பொதுக்கூட்டத்திற் குப் போகும்போதும், பெருத்த அளவில் திரண் டிருந்து, தி. மு. கழகத் தோழர்கள் கருப்புக் கொடி காட்டினர்.

நேரு பொதுக்கூட்டத்தில், தன் எண்ணத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு, அரை குறையாகப் பேச்சை முடித்து விட்டார்.

தோழர்கள் கண்ணதாசன், என். எஸ். இளங்கோ ஆகி யோர் கருப்புக்கொடி நிகழ்ச் சியில் கலந்துகொண்டனர்.

கோவையில் கருப்புக் கொடி

கோவை, அக். 4—

இன்று காலை, நேரு, கோவை வந்தபோதும் மலம்புழா அணைக் கட்டைப் பார்வையிட்டு திரும்புகையிலும் ஆயிரக்கணக்கான தி. மு. கழகத் தொண்டர்களால் கருப்புக்கொடி காட்டப் பட்டது. புறாக்களின் கால்களில் கருப்புக் காகிதம் கட்டி பறக்கவிடப்பட்டன.

கருப்புக் கொடி நிகழ்ச் சிக்கு தோழர் என். எஸ் இளங்கோ தலைமை தாங்கினார்.

மலம்புழாவிலிருந்து கோவைக்குப் பண்டித நேரு திரும்புகையில், ஆயிரக்கணக் கான தி. மு. கழகத் தொண் டர்கள் சர்க்கார் ஆஸ்பத்தி ரிக்கு எதிரே நின்றுகொண்டு, கருப்புக் கொடி காட்டி, 'நேருவே திரும்பிப் போ' என்று முழக்கமிட்டனர்.

கருப்புக் கொடி நிகழ்ச்சி மிக மிக அமைதியாக நடந் தது.

விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலர் கதர்க் கொடியை வைத்துக்கொண்டு நேருவுக்கு வரவேற்பளித் தனர்

மாமல்லபுரத்தில் கருப்புக் கொடி காட்டுவதைத் தடுக்க போலீசார் முன்னேற்பாடு

எனினும் கருப்புக் கொடி நிகழ்ச்சி வெற்றி பெற்றது

காஞ்சி, அக். 3—

2—10—53 அன்று செங்கற் பட்டு மாவட்டச் செயலாளர் தோழர் சி. வி. எம். அண்ணாமலை இரா. மணி, கே. நம்பி, ஆகிய வர்கள் நேருவுக்குக் காட்டப் படும் கருப்புக் கொடி நிகழ்ச் சியை நிறைவேற்றுவதற்காக திருக்கழுக்குன்றம் வழியாகச் செல்லும்போது போலீசின் ஆர்ப்பாட்டம் அதிகமாக இருந் தது. திருக்கழுக்குன்றம் தி. மு. க. தோழர்கள் இரவு 11 மணிக்கு மாமல்லபுரம் வந்து சேர்ந்தார் கள். செங்கற்பட்டு மாவட்டத்தி லுள்ள போலீசார் சாதாரண உடையில் இருந்துகொண்டு பொதுமக்களையும், போய் வந்து கொண்டிருப்போரையும் சோதித்தவண்ணமிருந்தார்கள் என்றாலும் நமது தோழர்கள் பலப் பல பிரிவுகளாகப் பிரிந்து போய் தனித்தனி இடங்களில் படுத்துக்கொண்டார்கள்.

காலை 4 மணிக்கு தோழர் சி. வி. எம். அண்ணாமலையும், மற்றும் பலரும், போலீஸ் வானில் ஏற்றப்பட்டு, திருக்கழுக் குன்றம் போலீஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டனர். அதன்பின் காலை 7 மணிக்கு திருக்கழுக் குன்றம் தோழர்கள் கைது செய்யப்பட்டனர். என்றாலும் நேரு பண்டிதருக்கு அவர் சிற் பங்களைப் பார்த்துத் திரும்பு கையில் கருப்புக்கொடி காட்டப் பட்டது. மற்ற தோழர்களால் நேரு சென்றபின் தோழர்கள்

(தொடர்ச்சி 1-ம் கலம் பார்க்க)

இன பேதமற்ற சர்வ கலாசாலை

லண்டன், அக். 3—

தென் ரொடீஷியாவில், எல்லா இனத்தாரையும், வித்தியாசம் பாராட்டாமல் அனுமதிக்கும் சர்வகலாசாலை ஆரம்பமாகிறது. பிரிட்டிஷ் சர்க்கார் இதற்கு 10 லட்சம் பவுன் நன்கொடை அளிக்க சம்மதித்திருக்கிறது.

காங்கிரஸ் ஊழியர் மாநாட்டில் ஆச்சாரியார் போட்ட பூசையின் எதிரொலி

சூளையில் கூலிகளின் வெறிச்செயல்

சென்னை, அக். 5—

4—10—53 பகல், சூளை தி. மு. கழகக் கிளைக் கழகத் தில் சொற்பயிற்சிக் கூட்டம் நடந்துகொண்டிருந்த சமயம், காங்கிரஸ் கூலிகள் சுமார் 20 பேர் கொண்ட கூட்டம், திடீ ரென்று, அங்கு நின்றுகொண்டு பேச்சைக் கேட்டுக்கொண் டிருந்த தோழர் துரைக்கண்ணு, (செயற்குழு உறுப்பினர், பச்சையப்பன் கலாசாலை மாணவர்) அவர்களை குத்தியதின் பலனாக வாயில் காயமேற்பட்டது.

பிறகு அந்தக் கூட்டம் அவரைக் கீழே போட்டு மிதித் தது. தோழர் சடகோபன் அவர்களையும் கூலிகள் குத்திய தின் பலனாக மூக்கில் காயமேற்பட்டது.

கூலிகள் கூட்டம் கல்லெறிந்து, அழகிரி படத்தை உடைத்து, பறந்துகொண்டிருந்த கழகக் கொடியை அகற்றி னார்கள்

தற்செயலாக வட்டத்தைச் சுற்றிக் கொண்டிருந்த போலீசாரும், ஹெட்கான்ஸ்டேபிளும் இடத்திற்கு வந்து காலிகளைப் பிடித்துக்கொண்டார்கள். 6 பேர் தவிர மற்றவர் கள் ஓடிவிட்டார்கள்.

போலீசார் கழகத்திலிருந்த தோழர்களையும், அழைத் துச் சென்றனர்; அடிபட்டவர்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி, சிகிச்சை செய்வித்தார்கள் தோழர் துரைக்கண்ணுக்கு வாயில் தையல் போடப்பட்டுள்ளது.

மாலை 3 மணிக்கு நமது கழகத் தோழர்களை விடுவித் தார்கள்.

மாலை 5 மணிக்கு தோழர்கள் பக்கிரிசாமி பிள்ளை, எம்.எல்.ஏ., டி. சண்முகம், எம்.எல்.ஏ., மாவட்டச் செயலா ளர் கே. எம். கண்ணபிரான் ஆகிய மூவரும் அங்கு வந்து நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டு, போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று நிலைமையை விசாரித்தறிந்தனர்.

இரவு 8 மணிக்கு ஸ்தல போலீசார் கழகத்தில் உடைந் திருந்த படத்தையும், வீசப்பட்டிருந்த கற்களையும் எடுத்துக் கொண்டு, கொடிக் கம்பத்தை உடைத்திருந்ததைப் பார்வை யிட்டு, பொது மக்களையும் விசாரித்துச் சென்றனர்.

புலன் விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. 6 காங் கிரஸ்காரர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்தக் கூலிகளின் தலைவரான டி. கே. கண்ணப்பன் அவர்களை ஜாமீனில்விட கேட்டது மறுக்கப்பட்டது. அதன் பின், வழக்கறிஞர் ஜாமீனில் கூலிகள் விடப்பட்டனர்.

★ ★★★★★★★★★★ ★

தோ. ஈ. சம்பந்தம் தாக்கப்பட்டார்

அக். 2-ம் தேதி நடைபெற்ற கருப்புக்கொடி நிகழ்ச்சியில் தோழர்கள் டி. எம். பார்த்த சாரதி, கே. ஈ. சம்பந்தம், எம். ஆர். பாண்டியன் ஆகியோர் காயமடைந்தனர். தோழர் பார்த்தசாரதியின் உடைகள் கிழிக்கப்பட்டன. கைக்கேடி காரம் நொறுங்கியது.

தோழர் சம்பந்தம் கல்லித்திட்ட மறியலில் ஒரு படைக்கு தலைமை தாங்கிச் சென்று, மூன்று வார சிறை தண்டனை அனுபவித்தவர்.

★

காயம்பட்டோரின் மேல் விபரம்

சென்னை மாவட்ட தி. மு. க. பொருளாளர் ஈ. கண்ணப்பன் அவர்கள் 2—10—53ல் நடை பெற்ற கருப்புக்கொடி நிகழ்ச்சி யில் தேசியத் தேசமுர்களால் காலிலும், முட்டிகாலிலும் பல மாகத் தாக்கப்பட்டார். இப் போது அவர் குணமடைந்து வருகிறார்.

மற்றும் தோழர்கள் திரு வொற்றியூர் மு. வரதராசன், எஸ். சுந்தரம் (8-வது வட்டம்) மற்றும் மு. புரட்சி மணி, சங்கர லிங்கம், வானவரம்பன், பொன்னுசாமி, சுந்தரமூர்த்தி, நரோத்தமன், வண்ணை-இரா மன், தேனாம்பேட்டை—சோம சுந்தரம், ராமன், எம். என். கோபால், கே. கே. சம்பந்தம், கே. என். சாமி (13-வது வட் டம்) ஆகியோர் காயமுற்றனர்.

மாமல்லபுரத்தில்......

(5-ம் கலத்தின் தொடர்ச்சி)

அனைவரையும் அவரவர்கள் முக வரியைப் பதிவு செய்துகொண்டு போலீசார் விடுவித்தனர். சப்-இன்ஸ்பெக்டர் ராமசாமி அய்யங் கார், சப்-இன்ஸ்பெக்டர் இராம சாமி அய்யர் இரவு முழுதும் நமது தோழர்களை தேடும் பணி யில் ஈடுபட்டிருந்தனர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஐவர் சிறையில்!
இன்று
35-வது நாள்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

5—10—1953 திங்கள்

சாணக்கியர்!

(1)

சேலம், கனம் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்களை, அவர்களுடைய பக்தகோடிகளும், காங்கிரஸ் சிஷ்யகோடிகளும் 'ராஜாஜி' என்று பெயரிட்டலவோ அல்லது அவர் பெயர் தங்கள் வாயில் நுழைவது கஷ்டமாக இருந்ததின் காரணமாக வடநாட்டுக் காங்கிரஸ் தலைவர்கள்தான் பெயரிட்டார்களோ, அந்த உண்மை நமக்குத் தெரியாது. யார் சூட்டியதாக இருந்தாலும், 'ராஜாஜி' என்ற பெயர், இன்றும், செலாவணியாகும் முகம் தேய்ந்துபோன செப்புக் காசாக இருந்து வருவது என்னமோ உண்மை. இவருக்குக் குலகுருபட்டர் என்ற பெயரை, காலஞ்சென்ற சர். ஆர். கே. சண்முகம், ஆட்டவா மாநாட்டிற்குச் சென்று வந்தபிறகு எரிச்சலிலே இட்டார். அன்று முதல், பேர்சமயம், இவர், அந்தப் பெயராலும் அழைக்கப்பட்டு வருகிறார்.

பொதுவாக, அந்தக் காலத்தில் 'ஆச்சாரியார்' என்ற சொல் அரசியல் வட்டாரத்தில் கிளம்பினாலே, அது இவரையே குறிப்பாகச் சுட்டிக் காட்டும் சொல்லாக இருந்து வந்து இருக்கிறது. தன் ஜாதியைச் சேர்ந்தவர்கள் பலரிருக்க, இவரை மட்டும் 'ஆச்சாரியார்' என்று அரசியல் வட்டாரம் அழைத்ததை, அன்று, கிடைத்தற்கரிய பெரும் பேறாகத்தான் ஆச்சாரியார் ஏற்று மகிழ்ந்து வந்தார்.

அன்று ஒரு நாள், இவருக்கு உள்ளூர பூரிப்பைக் கொடுத்துக்கொண்டிருந்த அதே 'ஆச்சாரியார்' என்ற அர்த்த புஷ்டியான வார்த்தை, இன்று அவருடைய ஆத்திரத்தைக் கிண்டிக் கிளறி கோபமூட்டி விடக்கூடிய இழிவான சொல்லாக மாறிப்போய் இருக்கிறதோ என்று நாம் சந்தேகிக்க வேண்டியதாக இருக்கிறது.

தன்னை 'ஆச்சாரியார்' என்ற ஜாதிப் பெயரிட்டு, மற்றவர்கள் அழைப்பது கூடாது என்ற சமத்துவ எண்ணம் அவருக்கு இருக்குமானால், 'ஆச்சாரியார்' என்று இனி தன்னை யாரும் அழைக்கக் கூடாது என்று ஒரு அறிக்கையை அவர் காரியமாய் வெளியிட்டால், நாம் இனி அவரைக் குறித்து எழுதுகின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் 'ஆச்சாரியார்' என்று எழுதுவதில்லை என உறுதி கூறுகிறோம். இதற்கு வேண்டுமானால், ஆச்சாரியார் விளக்கத் தயாரா? அதற்குத் தயாரில்லை ஆச்சாரியார்! ஏன்?

அவருடைய பரம மித்திரர்கள், அரசியல் வானர சேனைகள் 'ஆச்சாரியார்' என்று அவரை அழைக்குமகாலை அவருக்கு எங்குமில்லாத ஆனந்தம் அவருடைய முதிர்ந்த முகத்தில் பொங்கி வழிகிறது. அளவுக்கு அதிகமாகப் பெருமை கொள்ளுகிறார்! அவருடைய இதயம் ஆனந்தசாகரத்திலே மூழ்கித் திளைக்கிறது! ஆனால், நாம 'ஆச்சாரியார்' என்று விளிக்கும்போதுதான் அவருக்கு வேதனையும், வயிற்றெரிச்சலும் ஏற்படும், திடீரெனமாக மாறுகிறது அவர் தோற்றம்! இதற்கு நாம் என்ன செய்வது? கிழத்தில் ஆசை வெறுப்பு என்று சொல்வதைத் தவிர, ஆச்சாரியாருக்கு நாம் வேறு என்ன கூறக் கிடக்கிறது?

சாணக்கியர் என்ற பெயரை ஆச்சாரியாருக்கு யார் சூட்டினார்கள் என்பது, இதுவரையில் நமக்கு விளக்கமாகத் தெரியாமல் இருந்துவந்தது. இப்பொழுது, அவர் சொல்வதிலிருந்து, நமக்கு அதன் உண்மை விளக்கமாகிறது. காங்கிரசுக்குள்ளாக இருக்கிற, அதிருப்தி அடைந்துள்ள காங்கிரஸ் ஊழியர்கள்தான் 'சாணக்கியர்' என்ற பட்டத்தை ஆச்சாரியாருக்கு அளித்திருப்பதாக ஆச்சாரியார் சுட்டிக் காட்டுகிறார். இரண்டு நாளைக்கு முன்பு நடந்த சென்னை காங்கிரஸ் ஊழியர் மாநாட்டில், தனக்கு சாணக்கியர் என்று பெயர் வந்த பெரிய ரகசியத்தை ஆச்சாரியார் உலகத்தினர் உய்யத் திருவாய் மலர்ந்தருளி இருக்கிறார்.

'நான் வெறும் வாயளவில்தான் சாணக்கியன்; காமராஜரோ செயலளவில் சாணக்கியர்' என்று ஆச்சாரியார், சாணக்கியர் பட்டத்தை தோழர் காமராஜருக்கும், முடி சூட்டுகிறார். ஆச்சாரியாருக்குச் சாணக்கியர் என்ற பெயர் எல்லாவகையிலும் பொருந்தி இருக்கிற மாதிரி, தோழர் காமராஜருக்கும் பொருத்தமாக இருக்கும் என்று நம்மால் நம்ப முடியவில்லை. தோழர் காமராஜரின் பிறப்பு, நடப்பு ஆக இரண்டிலும், 'சாணக்கியர்' அமைப்பு இல்லவேலேசும் கிடையவே கிடையாது. சாணக்கியரின் உண்மை வரலாற்றை காமராஜரும், அவர் சார்புடைய காங்கிரஸ் கட்சியினரும் தெரிந்து கொண்டால், இந்த நமது கருத்தை ஆதரிக்க இருக்காலும் பின்வாங்க மாட்டார்கள். நமது கழகத்தைத் தாக்கி நிர்மூலமாக்க, அவர்களுக்கு எவ்வளவுதான் ஆச்சாரியார் தூபமிட்ட போதிலும், காங்கிரஸ் ஊழியர்கள் அதை ஒரு காதில்வாங்கி மறு காதால் விட்டுவிடுவார்களே அல்லாது அதை ஒரு பொருட்டாக மதித்து நடக்க முன்வரமாட்டார்கள்.

சாணக்கியன் என்பவன் ஒரு மலையாளப் பார்ப்பனன். சோழ சமஸ்தானத்தில் கிம்கனூர் என்ற சிற்றூரில், கிறிஸ்து பிறப்பதற்கு முன் நான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிறந்து, மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதி வரையில் உயிர் வாழ்ந்திருந்தவர். ஆரிய வேதங் கற்றவர். அதர்வண வேதத்தில் கூறப்படும் 'ஏவல், மந்திர தந்திரம், சூனியம்' முதலியவைவற்றில் கைதேர்ந்தவர்.

மகத ராஜ்யத்தை ஆண்ட பார்ப்பனீய சனாதனமதத்தை அழிக்க எழுந்த புத்த மதத்தைச் சார்ந்த நவநந்த மன்னர்களை ஒழித்துக்கட்டி, சந்திரகுப்தனின் பார்ப்பனீய ராஜ்யத்தை ஸ்தாபித்தவர் அந்தத் தென்னாட்டுப் பார்ப்பன சாணக்கியர். இது வரலாறு.

இந்தச் சாணக்கியரோடு தன்னை ஒப்பிட்டுப் பேசுவதாக ஆச்சாரியார், காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில் குறிப்பிட்டார். 'காமராஜர், செயலில் சாணக்கியர்' என்று ஆச்சாரியார் வியந்து கூறினார். சாணக்கியர் என்ற பாத்திரமாக இப்பொழுது காங்கிரஸ் கட்சியில் இருப்பவர், ஆச்சாரியாராக இருக்க முடியுமேயல்லாது காமராஜராக இருக்க முடியாது என்பதை காங்கிரஸ் ஊழியர்கள் இனியாவது உணர்ந்து கொள்ளுவார்கள் என்றே நம்புகிறோம். தோழர் காமராஜரும், சாணக்கியர் பட்டத்தை ஏற்க மறுப்பார் என்றே தீர்மானிக்கிறோம்.

ஆச்சாரியாருடைய இப்பொழுதையப் போக்கு, சாணக்கியர் என்ற பெயரோடு வேறு பெயரையும் ஆச்சாரியாருக்குச் சூட்டவேண்டிய கட்டாயத்தை நமக்கு உண்டாக்கி இருக்கிறது அதுவும், இந்தக் கட்டாயத்தை ஆச்சாரியாரே உண்டாக்கி இருக்கிறார்.

அதாவது. 'திராவிட துவேஷக் கட்சிகளை நாம் கணக்குப் பார்த்து தீர்த்துக் கட்டி, புத்தகங்களை மூலேதில் தீவிரமாக முனைய வேண்டும். அது சரித்திர நிகழ்ச்சியாகப் போய்விடவேண்டும்' என்று ஆச்சாரியார், ஊழியர் மாநாட்டில், சாணக்கியரின் மந்திர தந்திர ஏவல்களைச் செய்திருக்கிறார். சாணக்கியர், வரலாற்றுப் புருஷர். சித்திரபுத்திரன், பித்தலாட்டப் புராண புருஷர். இன்று முதல் ஆச்சாரியாரை, தி. மு. கழகத் தோழர்கள் அனைவரும், 'சித்திரபுத்திரன்' என, வாய்நிறைய அழைத்தாக வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறோம்.

மற்றவை தொடர்ந்து.

காங்கிரஸ் கூலிகள் தி. மு. கழகத் தோழர்களைத் தாக்கினதற்குக் கண்டனம்

தோழர் டி. சண்முகம், எம். எல். ஏ., அறிக்கை

2—10—53-ந் தேதியன்று வடவர் ஏகாதிபத்தியத் தலைவரான பண்டித நேருவின், சென்னை வருகையின்போது, நமக்களுக்கேற்பட்டுள்ள, இன்னல்களையும் அதிருப்தியையும் காண்பித்துக்கொள்ளும் பொருட்டு, அமைதியான முறையில் கருப்புக்கொடி காட்டும் செயலை மேற்கொண்ட தி. மு. கழகத் தோழர்கள், காங்கிரஸ் கூலிகளாலும், உடுப்பு அணியாத போலீஸ் தோழர்களாலும், மிருகத்தனமாகத் தாக்கப்பட்டுள்ளனர் என்றவெறுக்கத்தகுந்த செய்தியை, நகர மக்கள் எல்லோரும் தி. மு. கழகத் தொண்டர்பால் அனுதாபம் காட்டிக்கொள்ளும் முறையிலேயே பேசிக்கொண்டதைக் கேள்விப்பட்ட நான், அதுபற்றி முழு விவரமும் தெரிந்துகொள்ளும் ஆவலுடன், தி. மு. கழகத் தலைமை நிலையத்திற்குச் சென்றேன்.

அங்கிருந்த தோழர்களுக்கும் சரியானபடி தகவல் கிடைக்காத நிலையிலிருந்ததால், நானும், 'நம் நாடு' இதழின் ஆசிரியர் தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம், மற்றும் காஞ்சி-மணிமொழியார் அவர்களும், சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்குச் சென்று, அடிபட்டுள்ள தோழர்களின் நிலையறிய தீர்மானித்து, அதன்படியே சென்றோம்.

குறிப்பிட்டுள்ள நேரத்திற்கு முன்னதாகவே ஜெனரல் ஆஸ்பத்திரி பொறுப்பாளர் (ஆர். எம். ஓ) அவர்கள் அனுமதியுடன், கழகத் தோழர்களைச் சேர்த்திருக்கும் 'அவசரக் வார்ட்' என்று சொல்லப்படுகிற 33-வது வார்டுக்குச் சென்று பார்த்தபோது, கழகத் தோழர்களை அடித்தவர்கள் மனித இதயம் படைத்தவர்கள்தானா அல்லது நரகக்காடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவர்களா என்ற சந்தேகம் தோன்றியது. அந்த அளவுக்கு நமது தோழர்கள் மிருக வெறிக்கு இலக்காகியிருந்தார்கள்.

2-வது வட்டத்தைச் சேர்ந்த தோழர் கே. ஈ. சம்பந்தம் மண்டையில் பலத்த காயத்துடன், தையல் போட்டுத் தைக்கும் அளவுக்கு காயப்படுத்தப் பட்டிருந்தார் என்று வழியிலேயே தெரிவிக்கப்பட்டது. 3-வது வட்டத் தோழர் எம். ஆர். பாண்டியன், 18-வது வட்டம் தோழர் டி. எஸ். நல்லதம்பி, 17-வது வட்டத் தோழர் சந்திரன், 4-வது வட்டத் தோழர் பெரியசாமி, கொண்டித்தோப்பைச் சேர்ந்த தோழர் கே. ருத்ரமூர்த்தி ஆகியோர் பலத்த உள்காயங்களுக்கும், தையல் சிகிச்சைக்கும் ஆளாகியிருக்கும் பரிதாபக் காட்சி எங்கள் மனதை உலுக்கிவிட்டது.

42-வது வட்டத் தோழர் சுந்தரமூர்த்தி என்பவரின் மூக்கு சிதைந்து போய்விட்டது.

இவ்வளவுக்கும் காரணமான ஆச்சாரியாரின் ஆணவ போலீஸ் அடக்குமுறையும் கூலி பெற்று வயிறு வளர்க்கும் மரிகாயமிக்க காங்கிரஸ் குண்டர்களும் சேர்ந்து செய்த கூட்டுப்பணி என்று நினைக்கும்போது, இந்த ஆட்சியில் இதைவிட வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது என்ற நிலைக்கு வரவேண்டியதாகவே இருக்கிறது.

அடிபட்ட தோழர்களுக்கும், அவதிக்குள்ளான தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தையும், நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னைத் தோழர்கள் விடுதலை

சென்னை, அக். 5—

அக்டோபர் 2-ம் தேதியன்று நேருவுக்குக் கருப்புக்கொடி காட்டியபோது கைதாகி 2 ரூ. அபராதம் அல்லது இரண்டுநாள் தண்டனைபெற்ற தோழர்கள் வெண்மூஞ்சில், பி. வெங்கடேசன், ஆர். கிருஷ்ணன், வி. கிருஷ்ணசாமி, வி. கே. ரத்தினம், ஜி. காசிநாதன், எல். வி. கே. முத்து, ஏ. எஸ். நாதன் ஆகியோர் சனியன்று சிறை புகுந்து இன்று விடுதலை யடைந்தனர்.

* * *

23-வது வட்டம்

கண்டனக் கூட்டம் நடத்தியதாக 29—9—53 அன்று ஒரு வாரம் தண்டனைபெற்று சிறைக்குச் சென்ற தோழர்கள் டி. எம். வி. ராசன், ஜே. எஸ். ஆபிரகாம் இன்று 5—10—53ல் விடுதலையடைந்தனர்.

* * *

21-வது வட்டம்

கண்டனக் கூட்டமும் ஊர்வலமும் (23—9—53) நடத்தியதற்காக ஒரு வாரம் சிறைத் தண்டனைபெற்ற தோழர்கள் எஸ். ஈ. சதாசிவம், இரா. கண்ணன் இன்று 5—10—53ல் விடுதலை அடைந்தனர்.

* * *

16-வது வட்டம்

14—7—53 தண்டையார்ப்பேட்டையிலிருந்து ஊர்வலம் வந்ததற்காக 2 மாதக் கடுங்காவல் தண்டனையைப் பெற்ற 16-வது வட்ட அணிச் செயலாளர் தோழர் சி. எஸ். திராவிடமணி அவர்கள் இன்று 5-10-53 காலை விடுதலை யடைந்தார்.

நெசவாளர் பொதுக்கூட்டம்

சங்கரன்கோவில், செப். 30—

26—9—53-ல் கைத்தறியாளர்களின் கூட்டம் தோழர் எஸ். எம். திருவுடையான் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம், தோழர்கள் எ. ஆறுமுகம், சுப்பையா ஆகியோர், கைத்தறி நெசவாளர்கள் நிலை நாளுக்குநாள் மோசமாகிக் கொண்டு வருவதைப் பற்றியும், பட்டினித் தொல்லைகளும், பட்டினிச்சாவுகளும் பெருகி வருவதைக் குறித்தும் குறிப்பிட்டுப் பேசி, மக்கள் அரசாங்கம் காலம் கடத்தாமல் கைத்தறி நெசவினையும், நெசவாளர்களையும் பாதுகாக்க வேண்டுமென்று பேசினர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வேகவல்யம் சொற்பயிற்சி மன்றம்

அரக்கோணம், செப். 30—

29—9—53ல், திரு. வி. டி. சாமி அவர்கள் அலுவலகத்தில், மேற்படி மன்ற அமைப்புக் கூட்டம் தோழர் என். கோவிந்தராசன் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் நிர்வாகக் குழுவினராக தோழர்கள்: வி. டி. சாமி தலைவராகவும், ந. நாகரத்தினம் செயலாளராகவும், ந. செனார்த்தனன் துணைச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, வாரம் ஒருமுறை பயிற்சி கூட்டம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

தங்கள் அழிவைத் தாங்களே தேடிக் கொள்ள காங்கிரஸ் தொண்டர்களுக்கு ஆச்சாரியார் வேப்பிலை அடிக்கிறார்!

கள்ளம் கபடமற்றவர்போல் காமராஜரும் அந்த அக்கிரமத்திற்கு ஆமாம்போடுகிறார்!

'மவுண்ட் ரோடு' நிகழ்ச்சி

சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் கே. எம். கண்ணப்பிரான் தரும் விளக்கம்

2—10—53 நேருவுக்குக் கருப்புக் கொடி காட்டும் நிகழ்ச்சியில் நடைபெற்ற விரும்பத்தகாத அசம்பாவிதங்களுக்குக் காரணம் என்ன, அதற்குப் பொறுப்பானவர்கள் யார் என்பதைப் பொது மக்கள் அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

சென்னை மாவட்ட தி. மு. கழகத்தின் தீர்மானப்படி, 2—10—53 காலை, அமைதியான முறையில், நேருவுக்குக் கருப்புக் கொடி காட்ட, நம் தோழர்கள் ஆயத்தமாகியிருந்தார்கள்.

கழகத் தோழர்களுக்கு, காலை 9 மணி என்பதாக நேரம் குறிப்பிட்டிருந்ததால், ஏறக்குறைய எல்லாத் தோழர்களும், காலை 9 மணிக்கே குறிப்பிட்ட இடத்தை அடைவதென்ற எண்ணத்திலும், வீண் தொல்லைகளைத் தடுப்பதென்ற நோக்கத்திலும் சரியாக 9 மணிக்கே சிம்சன் கம்பெனி நோக்கி வர ஆரம்பித்தனர்.

ஆனால், காலை 8 மணிக்கெல்லாம், போலீஸ் வளையம், நடந்துவரும் சாதாரண பாதசாரிகளைக்கூட, சிம்சன் கம்பெனிக்கு அருகில் போக அனுமதிக்காமல், கண்டிப்பான அதிகாரத்தைப் பிரயோகித்தால், பெருவாரியான தோழர்கள் ஆங்காங்கே நின்று, தங்கள் கடமையைச் செய்யவேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார்கள்.

இவ்விதம் ஆங்காங்கு தனிப்படுத்தப்பட்டு நின்றிருந்த கழகத் தோழர்களை, ஆயுதந்தாங்கிய காங்கிரஸ் குண்டர்கள் மண்டையைப் பிளந்து, படுகாயத்திற்கு ஆளாக்கினார்கள். அடிபட்ட தோழர்களில் 6 பேர் வலி தாங்கமாட்டாமல், தகுந்த பாதுகாப்பைத் தேடி, தங்கள் தோழர்கள் குழுமியிருக்கும் இடத்திற்கு 'எப்படியோ' வந்து சேர்ந்தார்கள்.

இந்த அறுவர் அடியுண்டதைத் தொடர்ந்து, பல தோழர்கள் படுகாயத்துக்குள்ளாகிக் கொண்டிருக்கும் செய்தி விநாடிக்கு விநாடி வந்து கொண்டேயிருந்தது.

சுமார் 4 அடிக்குக் குறையாத பலம் வாய்ந்த கழிகளின் நுனியில், கூர்மையான கத்தியைச் சொருகி வைத்து, தேசியக் கொடி (காகிதம்)யால் அதை மறைத்து வைத்துக் கொண்டிருந்தனர், ஒவ்வொரு 'வரவேற்பாளரும்'!

இதைக் கண்ட நம் தோழர்கள் சிலர், "நமது கடமையை ஆற்ற முடியாது போலிருக்கிறதே; நமது கையில் ஒரு சிறு கருப்புத் துண்டைத் தவிர, வேறு எதுவும் இல்லையே; ஆனால், நம்மைத் தாக்க வந்திருப்போர், கத்தி, கழி, கத்திக்கோல், 'பிளேடு' சகிதம் வந்திருக்கின்றனரே; எவ்வாறு நடந்துகொள்வது," என்று என்னைக் கேட்டனர்.

அதற்கு நான், எதுவந்தாலும் இந்த இடத்தைவிட்டு அசைய வேண்டாம்; நமது குறிக்கோள், கருப்புக் கொடி காட்டுவதே தவிர, நமக்குள்ளாகவே தாக்கிக் கொள்வதல்ல; கண்ணியம்—கட்டுப்பாடு நமது இயக்கத்தின் கண்டிப்பான கட்டளை என்பதை மனதிற் கொண்டு, ஒவ்வொரு தோழரும் பணியாற்றுங்கள்," என்று சொன்னேன்.

நான் இதுபோல் சொல்லி முடிப்பதற்குள்ளாக, சிந்தாதிரிப்பேட்டையிலிருந்துவரும் 28-ம் நெ. பஸ், சிம்சன் 'ஸ்டாப்' பிங்கில் வந்து நின்றது. அதற்குள்ளிருந்து, 25 பேருக்குக் குறையாத காங்கிரஸ் சின்னம் தரித்த தோழர்கள், 6 அடி நீளமுள்ள பெரிய பெரிய 'பாணு தடி'களில் காங்கிரஸ் கொடியை செருகிக் கொண்டு—நேரே இறங்கினர். அந்தத் தடியின் நுனியில், அதிகமாகப் பழக்கத்திலில்லாத ஒருவித அமைப்புள்ள கூர்மையான கத்தி செருகப்பட்டிருந்தது.

அவர்கள், பஸ்ஸைவிட்டு இறங்கியதும், தடிகளைச் சுழற்றி 'பாணு' சுற்ற ஆரம்பித்தனர். இதனால், கழகத் தோழர்கள் பலருக்குப் படுகாயம் ஏற்பட்டது. இதன் விளைவாகத் தோழர்களிடையே காணப்பட்ட அமைதி சிதறிவிட்டது. மூலைக்கொருவராகச் சென்று, அந்தக் காலிகளின் கையிலிருந்த தடிகளைப் பிடுங்கி, அவர்களில் சிலரைப் போலீசாரிடம் ஒப்புவித்தனர்.

அதற்குள் நேரு வரவை அறிந்த தோழர்கள், தங்களைத் தாக்கிக் கொண்டிருக்கும் காலிகளின் மிருகத்தனமான அடிகளையும் பொறுமையாகச் சமாளித்துக்கொண்டு கருப்புக் கொடி காட்டினர்.

நேரு, மண்டபத்தினுள் நுழைந்ததும், தங்களது தந்திரம் பலிக்காது போனதில் ஆத்திரமடைந்த காலிகள், 1,000 பேருக்கு மேலாக, கழகத் தோழர்களை நோக்கி, அபாயகரமான ஆயுதங்களுடன் பாய்ந்தோடி வந்தனர்

இதைக்கண்ட போலீசார், கழகத் தோழர்கள்மீதே தடியடிப் பிரயோகம் செய்து, 'அமைதி காக்கும் தொழிலை' புரிந்தனர்.

இதுதான் நடந்த விஷயம். காலிகள், திட்டமிடப்பட்ட முன்னேற்பாட்டுடன் பெரும்பொருள் மூலதனத்துடன் காலித்தனத்தைக் காட்டினார்கள். கண்ணியமும், கட்டுப்பாடும் நமது தோழர்களின் ரத்தத்தில் ஊறிப்போன உணர்ச்சியாக மட்டும் இல்லாதிருந்தால், நேற்று நடைபெற்ற காங்கிரஸ் தோழர்களின் அக்கிரமத்தினால், மவுண்ட் ரோடில், இரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோடியிருக்கும். அதிகமான தாக்குதலுக்குள்ளானோர், நமது தோழர்கள்தான். வெற்றி பெற்றவர்களும் நம் தோழர்கள்தான்.

எனவே, நம் தோழர்கள் விரும்பத்தகாத முறையில் நடந்து கொண்டார்களென்று தேசிய ஏடுகள் சொல்வது பெரும் பித்தலாட்டத்தனமாகும்.

காலிகள் தாக்கும் சமயத்திலெல்லாம், நமது தோழர்கள், ஆங்காங்கிருந்த போலீஸ் அதிகாரிகளிடம் புகார் செய்திருக்கின்றனர். அவர்களும், நம் தோழர்கள் அடிபடுவதையும், அடிக்கப்படுவதையும் பார்த்துக் கொண்டு வாளாவிருந்தனர். காலித்தனத்தில் ஈடுபட்டது யார் என்பது, அந்த இடத்தில் இருந்த போலீசுக்கு நன்குத் தெரியும்.

வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் மூலவராக வந்த பிரதமர் நேருவுக்கு, சென்னை மாவட்டக் கழக முடிவுப்படி, அமைதியாகக் கருப்புக் கொடி காட்டி, காங்கிரஸ் கயவர்களின் தாக்குதலுக்கு ஆளாகி, குருதி கொட்டி, மகத்தான வெற்றியைத் தேடித் தந்த கழகத் தோழர்கள் அனைவரையும் மனமாரப் பாராட்டுகிறேன். அவர்கள் ஏற்றுக்கொண்ட கஷ்ட நஷ்டங்கள் வீண் போகாது என்பதை எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்பணியில் என்னுடன் ஒத்துழைத்து, பண்டிதருக்கு புத்தி புகட்டிய வட்டாரச் செயலாளர்கள், மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திராவிடரைத் தாக்கத், திராவிடரைத் தூண்டிவிடும் சாணக்கியரின் தப்பிலித்தனம்

தி. மு. கழகத்தின் கணக்கை நேர் செய்ய குல்லூகரின் அற்ப ஆசை

சென்னை, அக். 5— "துவேஷப் பிரசார வழக்குகளை தீர்த்துக் கட்ட தீவிர முயற்சி செய்வதில் காங்கிரஸ் ஊழியர்கள் முனைய வேண்டும்," என்று, அக்டோபர் 3ம் தேதி காலை, தேனாம்பேட்டை காங்கிரஸ் ஊழியர்கள் மாநாட்டில் சென்னை முதலமைச்சர் ஆச்சாரியார் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

'திராவிட கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் முதலியவற்றை நன்கு கவனித்துக் கொள்ளவேண்டும். அவர்கள் எதைக் கொண்டு பலம் பெறப் போகிறார்களோ அவற்றைப் போக்க முனையவேண்டும்.

முன்பு நான் கம்யூனிஸ்டுகளை முதல் நம்பர் எதிரி என்றேன். அவர்களுக்கு லீவு கொடுத்தாகி விட்டது. இப்போது, இவர்கள் தான் என் முதல் நம்பர் எதிரிகள்!

இவர்கள் வேற்றுமையை வளர்க்கிறார்கள். குழந்தைகள், பெண்கள் ஆகியவர்களின் உள்ளத்தில் விஷத்தை உண்டாக்கி வருகிறார்கள்.

ஏதாவது சிறு அரசியல் மாறுதல்கள் ஏற்பட்டால் அதைப் பயன்படுத்தி குழப்பம் ஏற்படுத்தப் பார்க்கிறார்கள். எவ்வளவு பேர், வடகலை, தென்கலை என்றெல்லாம் பார்த்து, கணக்குக் கண்டுபிடித்து எழுதுகிறார்கள்.

ரூ. 1000 அபராதம் போட்டாலும் கட்டக் கூடியவர்கள் அவர்கள்; அபராதம் கட்ட மறுத்து சிறைக்குப்போய்விட்டு, சிறைக்கு அனுப்பிவிட்டார்கள் எனக் கூக்குரல் போடுகிறார்கள்.

"கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி," என்று சொல்லுவார்களே, அதுபோல, காங்கிரஸ் காரர்கள் சிறைக்குப் போனார்களே, அதுபோல, நாங்களும் போகிறோம் என்கிறார்கள்.

சிறைக்குப் போவதற்கென, தவறு செய்துவிட்டுப் போவதற்குப் பதில் தையற் காரிடம் சொல்லி சிறை உடை தைத்துப் போட்டுக்கொண்டு வீதியில் திரியலாம்" என்று பேசினார்.

அடுத்து பேசிய தோழர் காமராசர், "வடநாடு, தென்னாடு, என்று ஒரு பெருத்த கிளர்ச்சி செய்து, மக்கள் மனதில் தீய எண்ணத்தைப் புகுத்துகிறார்கள் சிலர். இதுவரை, வெறும் வேடிக்கை என்று விட்டு வைத்துக் கொண்டிருந்தோம்; இனி விட முடியாது. இதில் காங்கிரஸ் ஊழியர்கள் தீவிரமாக நடந்துகொள்ள வேண்டும்," என்றார்.

மு. கருணாநிதி,—இராம-சுப்பையாவை கண்ணதாசன் சந்தித்தார்

1-10-53 காலை பதினொரு மணிக்கு, திருச்சி மத்திய சிறையில் தோழர் மு. கருணாநிதி அவர்களையும், காரைக்குடி இராம-சுப்பையா அவர்களையும் தோழர் கண்ணதாசன் சந்தித்தார்.

தோழர் இராம-சுப்பையா அவர்கள் இளைத்து ஆள் உருமாறிப் போயிருக்கிறார். அந்த செயல் வீரரை, முன்பு சென்று பார்த்தவர்கள், இப்பொழுது பார்த்தால், அடையாளங்கண்டு கொள்ள முடியாது. உடல் இளைத்திருந்தாலும், அவர் மிகுந்த உற்சாகத்தோடு இருக்கிறார்.

தோழர் மு. கருணாநிதி அவர்கள் தெளிவான உள்ளத்தோடும், மகிழ்வு காட்டும் முகத்தோடும் உற்சாகமாகப் பேசிக்கொண்டிருந்தார். கட்சி விவகாரங்களை அறிந்துகொள்வதில் அவர் அதிக ஆர்வம் காட்டினார்.

"நானும் இந்தச் சிறைக்குத்தான் வரப்போகிறேன்," என்று தோழர் கண்ணதாசன் சொன்னதும், "சீக்கிரமே வந்து சேருங்கள்" என்று இருவரும் விடைகொடுத்து அனுப்பினர்.

சூளை குருசேரிக்குத் தீயிடுவதாக காமராஜர் கதர்க் கொடி படையினரின் அச்சுறுத்தல்

சேரிவாழ் மக்களைத் தாக்கக் காங்கிரஸ் கூலிகள் கட்டவிழ்த்து விடப்பட்டனர்

தாழ்த்தப்பட்ட மக்களில் 18 கழகத் தோழர்கள் கைது

சென்னை, அக் 3— சூளை தி. மு. கழக செயலாளர் பாலன் அறிவிப்பதாவது:

2—10—53ல் தாழ்த்தப்பட்டவர்கள் வசிக்கும் பகுதியைத் தீயிட்டுக் கொளுத்துவதாக துண்டுத் தாள்கள் மூலம் விளம்பரப் படுத்தப்பட்டிருந்தது. இதைக் கண்ட பொது மக்கள் இவ்வட்ட (17) கவுன்சிலரிடம் முறையிடச் சென்றிருந்தார்கள்.

முறையிடச் சென்றிருந்த சூளை, திராவிட முன்னேற்றக் கழக செயலாளரையும், மற்ற உடன்சென்ற தோழர்களையும், சோடா புட்டிகளாலும், ஓடுகளாலும், தடிகளாலும் இவ்வட்ட காங்கிரஸ் கவுன்சிலர் வரதராஜுலு என்ற 'காங்கிரஸ் கனவான்' தலைமையில், அவருடைய தேசிய இளைஞர் முன்னணியும் தாக்கிற்று.

இதனுடன், போலீசையும் பக்கபலமாக வைத்துக் கொண்டு, இரவு சுமார் 12 மணிக்கு, தாழ்த்தப்பட்ட குடிசையினர் பகுதியில் புகுந்து, பெண்டிர்களையும், பிள்ளைகளையும், தூங்கிக் கொண்டிருந்த தோழர்களையும் தாக்கினர். அவர்களுடைய தட்டு முட்டுச் சாமான்களை சூறையாடியும், வீடுகளை இடித்தும்—இவ்வளவு அட்டகாசம் செய்து, சுமார் 18 தோழர்களைக் கைது செய்துகொண்டு சென்றிருக்கின்றனர், போலீசார் காங்கிரஸ் முகாமிலே யாரும் கைது செய்யப்படவில்லை.

காங்கிரசின் இந்த இழி செய்கையையும், போலீசின் அக்கிரமத்தையும், சூளை வாழ் மக்கள் வன்மையாகக் கண்டிக்கிறார்கள். சர்க்கார் இதில் தலையிட்டு நீதியை நிலைநாட்ட வேண்டுகிறோம்.

காஞ்சிபுரம்

★

6—10—53 செவ்வாய் மாலை 6 மணிக்கு

இடம்:— கெங்கைகொண்டான் மண்டபத்தருகில்

தலைவர்: எம். எஸ். மணி

காஞ்சி—கல்யாணசுந்தரம்

அருண்மொழி, பி. ஓ எல்.

மற்றும் பலர் பேசுவர்

பஞ்சாயத்து பாடசாலை திறப்பு

மேல்குமாரமங்கலம், செப் 26— இவ்வூர் பஞ்சாயத்தார் செலவில் கட்டப்பட்டுள்ள பாடசாலையை பஞ்சாயத்து தலைவர் தோழர் வெ. கிருஷ்ணமூர்த்தி திறந்துவைத்து, ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டத்தைக் கண்டித்துப் பேசினார்.

கலை நிகழ்ச்சி

திண்டுக்கல், செப். 30— 27—9—53-ல், வ. உ. சி. திடலில், தோழர் என். முத்து தலைமையில், மதுரை தோழர் எம். ஆர். கணேசன்—தோழியர் லட்சுமி குழுவினரின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் திரண்டிருந்தனர். கலைநிகழ்ச்சியில், தோழர் எம். ஆர். கணேசன், தி. மு. கழகத்தின் [illegible]

தமிழ் ராஜ்யமா? எஞ்சிய சென்னையா?

திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் அறிக்கை

திருச்சி, அக். 2— ஆந்திர நாடு பிரிந்து, ஆந்திர அரசு நடைபெறத் தொடங்கிவிட்டது. பிரிந்ததும், தமிழ் நாடு, தமிழ் ராஜ்யம் என்றோ, தமிழ் மாகாணம் என்றோ நடைபெற வேண்டும். அவ்வாறின்றி தமிழ் நாட்டிற்கு, "எஞ்சிய சென்னை ராஜ்யம்" என்று பெயரிடுவது நேர்மைக்கும், உண்மைக்கும் மாறானதாகும். இது 3 கோடி தமிழ் மக்களை வேண்டுமென்றே இழிவுபடுத்துவதாகவும் இருக்கும்.

தென்கன்னடமும், மலையாளமும் நம்முடன் இருக்கின்றதே என்று கூறுவதானால், அது, நொண்டிச் சாக்காகுமே தவிர, உண்மையாக இராது. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வட்டம்தான். அவர்கள் நம்மோடு இருக்க விரும்பினாலும், தழுவி அணைத்துக் கொள்வோம்; அல்லது, தங்கள் தங்களுக்காக ஏற்பட்டிருக்கின்ற, மைசூர்,—திருவாங்கூர் ராஜ்யங்களாகிய கன்னட மலையாள ராஜ்யங்களோடு போய்ச் சேர்ந்து கொள்ள விரும்பினாலும் கைகூப்பி அனுப்பிவைப்போம். இதற்காக, தமிழ் நாட்டிற்கு மாறு பெயரிடுவது என்பது நீதியாகாது.

போராட்டம் தொடங்கு முன்பே, 'எஞ்சிய சென்னை ராஜ்யம்' என்ற பெயர், திருத்தப் பெற்று, தமிழ் நாட்டை, அதன் உண்மைப் பெயராலேயே அழைப்பது நல்லது என, அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுகிறோம்.

(இதன் பிரதி அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கப் பெற்றிருக்கிறது.)

தமிழ்நாடு சோஷலிஸ்ட் கட்சி

தமிழ்நாடு சோஷலிஸ்ட் கட்சியின் ஊழியர்கள் கூட்டம் மதுரையில் செல்லமுனி[illegible]ல் கவுன்சிலர் தோழர் கிருஷ்ணன் தலைமையில் 27—9—53 அன்று நடைபெற்றது. தோழர் அந்தோணிப்பிள்ளை எம்.எல்.ஏ., மற்றும் பல முக்கியஸ்தர்கள் கட்சியின் உடனடி வேலைகள் பற்றி பேசினர். அப்போது, தமிழ் நாடு சோஷலிஸ்ட் கட்சியின் அட்ஹாக் கமிட்டி நிறுவப்பட்டது. தோழர் கணபதி பரிபாலகராகவும், மற்றும் அந்தோணி பிள்ளை, கோவிந்தராசலு, என். கிருஷ்ணன் ஆகியோர் கமிட்டி உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டனர்.

கழகக் கூட்டங்கள்

★

சேலம்

6—10—53 செவ்வாய் மாலை

தலைவர்: எஸ். ஏ. அன்புக்கரசு

பேசுவோர்:

கோபி. என். ராசு
சிற்றுளி-சுப்ரமணியம்
ஈ. ஆர். கிருஷ்ணன்

★

செங்கற்பட்டு

7—10—53 புதன் மாலை

தலைவர்: ஏ. ப. ராமன்

பேசுவோர்:

ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.
ஏ. எல். சி. கிருஷ்ணசாமி
சி. வி. எம். அண்ணாமலை
எஸ். எஸ். ராஜேந்திரன்

★

சித்தலவாய்

7—10—53 புதன் மாலை

தலைவர்: மதியன்பன்

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு
தமிழ் முழக்கன்

"விசால ஆந்திர கோரிக்கை ஏகாதிபத்திய மனப்பான்மைகொண்டது"

'மொழிவழி அரசு அமைப்புக்கமிஷன் இவ்வருட இறுதியில் நிறுவப்படும்'

வருந்துகிறோம்

சென்னை மாவட்ட தி. மு. கழகப் பொருளாளர் தோழர் ஏ. கண்ணப்பன் அவர்களின் அருமைத் தாயார் ஞானம்பாள் அம்மையார் தனது 84-வது வயதில் சிலகாலம் நோய்வாய்ப்பட்டிருந்து, 27—9—53-ம் நாள் இரவு 11-30 மணிக்குக் காலமானார். அன்னையை இழந்து வாடும் கண்ணப்பன் அவர்களுக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சர்நால், அக். 2— ஆந்திர மாகாணத்தைத் துவக்கிவைத்த நேருவை, 'விசால ஆந்திரம் அமைத்து, ஐதராபாதத்தைத் தலைநகராக்குக' என்ற கோரிக்கையைப் பற்றி, பத்திரிகை நிருபர்கள் அபிப்பிராயம் கேட்டபோது, "அத்தகைய ஒரு கோரிக்கை ஆதிக்க வெறியும், ஏகாதிபத்திய மனப்பான்மையும் கொண்டது" என்று பதிலளித்தார்.

ஆந்திர காங்கிரஸ் கமிட்டி, விசால ஆந்திரம் அமைக்கக் கோரி ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

ஆனால், நேரு, மொழிவழி மாகாண கமிஷன் இவ்வருட இறுதியிலேயே அமைக்கப்படுமெனவும், அக்கமிஷன் இம்மாதிரி விஷயங்களிலும் மேலும் கலாசார, பொருளாதார, மொழிவழி அரசு ஆகியவை பற்றியும் விசாரணை செய்யும் என்றுகுறிப்பிட்டார்.

"அகில இந்திய காங்கிரசின் சமீபத்திய தீர்மானம் தெளிவானது; ஆந்திர காங்கிரசின் விசால ஆந்திரக் கோரிக்கைத் தீர்மானம் வெறும் 'பழக்க'த்தால் கொண்டுவரப்பட்டது" என்றார்.

முன்னாள் இந்திய சர்க்கார் மந்திரி காட்கில், 'ஆந்திர மாநில அமைப்பு, விசால ஆந்திர அமைப்புக்கு அடிப்படை' என்று பேசியதைக் கண்டிப்பது போன்றே, நேரு பேசினார்.

தூத்துக்குடியில் தோழர் எஸ். நடராசன்

ரயில் நிறுத்தக் கிளர்ச்சி சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டு, விளாத்திகுளம் சிறையிலிருக்கும் நகரசபை தவைலரும், நகர தி. மு. கழகச் செயலாளருமான தோழர் எஸ். நடராசன் அவர்கள் 28—9—53-ல் மற்றொரு வழக்குக்காக தூத்துக்குடி கோர்ட்டுக்கு கொண்டுவரப்பட்டார். நடராசன் கோர்ட்டுக்கு வந்திருப்பதைக் கேள்விப்பட்ட நூற்றுக்கணக்கான தோழர்கள் சென்று, செயலாளருக்கு தங்களின் வணக்கத்தைக் கூறினார்கள். தோழர் நடராசன் அவர்களும் தோழர்களும் கழகவேலைகள் குறித்து பேசினார்கள்.

அன்றிரவு தூத்துக்குடி சிறையிலிருந்துவிட்டு மறுதினம் விளாத்திகுளம் செல்ல பஸ்நிலையம் வந்தார்கள். பஸ் நிலையத்தில் நூற்றுக்கணக்கானதோழர்கள் வந்திருந்து உற்சாகத்துடன் வழியனுப்பினார்கள். தோழர் நடராசன் அவர்கள் விளாத்திகுளம் சிறையில் தன்னுடனிருக்கும் தோழர்கள் சிவசாமி, தங்கப்பழம் சுகமாயிருப்பதாயும், கழகத் தோழர்கள் அனைவரும் அமைதியாகவும், கட்டுப்பாடாகவும் இருக்கவேண்டுமென்றும், கழக வேலைகளைச் சிறப்பாக நடத்துமாறு கேட்டுக்கொண்டும், கழகத் தோழர்களிடம் கூறி, விடைபெற்று பஸ்ஸில் விளாத்திகுளம் புறப்பட்டுச் சென்றார்.

வைஃவ்யம் நினைவுப் படிப்பகம்

மதுரை, செப். 27— தல்லாகுளம், கைவல்யம் நினைவு படிப்பக உறுப்பினர் கூட்டம், தமுக்கம் பூங்காவில் தோழர் எஸ். ஆர். சந்திரன் தலைமையில் நடைபெற்றது. அச்சமயம், தோழர்கள் சோ. பாண்டுரங்கன் செயலாளராகவும், கு. மணிவண்ணன் அனைச் செயலாளராகவும், மது. இ மாவளவன் பொருளாளராகவும், செயற்குழு உறுப்பினர்களாக தெ. ச. ராசு, கூடலரசன், சீனி முருகேசன், கு. சோலரதன் வ. நடராசன், ச. சுப்ரமணியன், சேதுரத்தினம், எம். சி. குழந்தைவேலு, ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நண்பர்கள் கழகம்

ஆம்பூர் (வ. ஆ.), செப். 30— 27—9—53-ல், தி. மு. கழகக் கட்டிடத்தில், தோழர் பி. ராமலிங்கம் தலைமையில், மேற்படி கழகத்தை தோழர் எ. ஜி. சாமி அவர்கள் துவக்கிவைத்துப் பேசினார். தலைவராக டி. எஸ். ராம் மூர்த்தியும், செயலாளர் வி. கே. கேசவனும், பொருளாளராக ஜி. வரதராஜனும், நிர்வாக உறுப்பினர்களாக தோழர்கள் ஜி. அரசு, கே. பி. விட்டல், சி. ஆர். கே. சாமி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஹரிஜன சங்கம்

மோகனூர், செப். 30— 27—9—53-ல், தோழர் குரங்கன் தலைமையில் மேற்படி சங்கக் கூட்டம் கூடியது. அவ்வமயம், ஹரிஜன முன்னேற்றத்தின் வழிவகைகள் பற்றி தோழர்கள் பலர் விரிவுரையாற்றினர். பின்னர், ஹரிஜன ஆலயப் பிரவேசத்தின்போது விஜேபுரம் பாவை தாக்குண்டதைக் கண்டித்து தீர்மானம் நிறைவேறியது.

கண்டனக் கூட்டங்கள்

★

சென்னை (23வதுவட்டம்)

27-9-53 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தி. மு. கழக கூட்டம், தோழர் சி.எஸ். மணி தலைமையில் கூடி பல கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றியது.

பெங்களூர்

27—9—53ல், பெங்களூர் பிளாக் பல்லி தி. மு. கழகத்தின் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் பல கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

• • •

அக்கிப்பேட்டை முரசொலி மன்றத்தின் சார்பில், தோழர் சந்திரசன் தலைமையில், தோழர் மு. பாலகிருட்டிணன் அவர்கள் பேசினார். கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலப்பாளையம்

தி. மு. கழகப் பொதுக்குழு கூட்டம், தோழர் டி. என். ஆறுமுகம் தலைமையில் 25—9—53 அன்று கூடியது. அதுபோது கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வடக்கநந்தல்

13—9—53-ல்தோழர் இராபாகன் அவர்கள் இல்லத்தில் வடக்கநந்தல் தி. மு. கழக அங்கத்தினர் கூட்டம், தோழர் வே. விநாயகத்தான் அவர்கள் தலைமையில் கூடி பல கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றியது.

திருப்பூர்

13—9—53ல் ஓர் மாபெரும் கண்டன ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் என். இளங்கோ, பல்லடம் பொன்னுசாமி ஆகியோர் பேசினர். கூட்டத்திற்கு தாரை ஒளியழகன் தலைமை வகித்தார்.

பொட்டனேரி

14—9—53 அன்று பொட்டனேரியில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கே. என். மாணிக்கம், ஏ. வெங்கடாசலம், கே. வி. கே. ராமசாமி, நடராசன், சின்னசாமி, ஜெகன்னாதன், பாலு, என். எஸ். இளங்கோ ஆகியோர் பேசினர்.

பாசாரப்பட்டி

13—9—53ல், கண்டன ஊர்வலமும், அன்று மாலை தோழர் எல். முனிராசு தலைமையில் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் மு. பலராமன், சக்கரவேல், புரட்சிமணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

வனவாசி

26—9—53-ல், தி. மு. கழக செயற்குழு கூட்டம், தோழர் ப. சண்முகம் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் பல கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குஹூர்

27—9—53-ல், மருதி மைதானத்தில், தி. மு. கழகத்தின் சார்பில், எஸ். என். அற்புதசாமி அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தீர்மானங்கள் பல நிறைவேறின.

• • •

அன்றையதினமே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக குஹூர், மருதி மைதானத்தில் "திராவிட நாடு பிரிவினைகள்" கொண்டாட்டக் கூட்டம், கழகச் செயலாளர் என். எஸ். அற்புதசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. "திராவிட முரசு" ஆசிரியை தோழியர் அஞ்சலை, கோவை என். எ. ராசமாணிக்கம், சி. டி. தண்டபாணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திரு. வி. க. நிதி

சென்னை, செப். 27— சென்னைத் தமிழ்ச் சங்கத்துத் திரு. வி. க. நினைவுக் குழுவினர் அறிவிப்பது:—

நினைவு நிதிக்கு இன்று வரை வரவு;—

திரு. இருசாபகம், இலக்கியக் கழகம், திருப்பத்தூர் ரூ.	200— 0—0
காரைக்குடி அழகப்ப கல்லூரி உழையாள், விசாலாட்சி கிந்திவிசின் மாணவர்கள்—(தோழர் மா. சாமி அப்பா மூலம்)	132— 0—0
பொள்ளாச்சி நாலுவர், வேட்டைக்காரன் புதூர் போர்டு உயர்நிலைப் பள்ளி- (திரு. வித்துவான் எம். கந்தசாமி மூலம்)	16—10—0
திரு. மு. வரதராசனார், பச்சையப்பன் கல்லூரி	100—0—0
திரு. அன்பு கணபதி, பச்சையப்பன் கல்லூரி.	51— 0—0
கூடுதல் ரூ.	499—10—0

குறிப்பு:—பம்பாய்த் தமிழ்ச் சங்கமும், கோவை பீளமேடு பி. எஸ். ஜி. கல்லூரி மாணவர் இலக்கியக் கழகமும் நிதி உதவ இசைந்துள்ளனர். நிதி அனுப்புவோர்: மு. வரதராசனார், 8-ஏ, செல்லம்மாள் தெரு, அமைந்தகரை, சென்னை—10 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்கள், அறிஞர் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, ருக்மணி கார்டன் தெரு, ராயபுரம்) வெளியிடப்பெற்றது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.

தி. மு. கழக தலைமை நிலைய ஆங்கில வெளியீடு

ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டிய ஆங்கில நூல்

THE ANSWER

விலை 6 அணா

அண்ணாதுரை, நெடுஞ்செழியன், சம்பத், மதியழகன், நடராசன் ஆகியோர்

நீதி மன்றத்தில் தந்த வாக்குமூலங்கள்

கிடைக்கும்: பத்மா பிரஸ், காஞ்சிபுரம்.